

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2024) முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் சிவசுப்பிரமணியன் அவர்களின் சென்னை, மேற்கு மாம்பலத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தந்தை தியாகராஜன் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் 06.12.2024 அன்று சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, மருந்து, மாத்திரைகளின் இருப்பு குறித்து கேட்டறிந்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ.தேவிமீனாள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் புற்று நோய் சிகிச்சை மையம் தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தனது சொந்த நிதியிலிருந்து புற்று நோய் சிகிச்சை மையம் அமைப்பதற்காக ரூ.12.50 இலட்சத்திற்கான காசோலையினை திருப்பூர் ரோட்டரி பொது நல அறக்கட்டளை தலைவர் மரு.ஆ.முருகநாதனிடம் வழங்கினார். இதில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரியில் வேலூர் மண்டல தி.மு.க.

# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர்கள் டி.ஆர்.பி.ராஜா – அர.சக்கரபாணி சிறப்புரை! தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. –ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – தேவராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, டிச. 18 -

கிருஷ்ணகிரி தேவராஜ் மகால் திருமண மண்டபத்தில், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்கள் அடங்கிய வேலூர் மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்தார். மண்டல பொறுப்பாளர் இசை வரவேற்புரையாற்றினார்.

வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் கே.தேவராஜ் எம்.எல்.ஏ., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

இதில், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தமிழக தொழில்துறை அமைச்சருமான டிஆர்பி.ராஜா பங்கேற்று, சிறப்புரையாற்றினார். இதில், சிறப்பு அழைப்பாளராக தமிழக உணவு மற்றம் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்று, ஆலோசனை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் குடியாத்தம் அமுலு விஜயன் , ஆம்பூர் ஏ.சி.வில்வநாதன் , திருப்பத்தூர் ஏ. நல்லதம்பி, ஓசூர் மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா, சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் வினோத் காந்தி, தகவல் தொழில் நுட்ப அணி மாநில நிர்வாகிகள் கோ.வி.லெனின் , மாநில துணைச் செயலாளர் நவீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று திராவிட நாயகன் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கை எட்ட இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தளத்திலும் களத்திலும் முழுமையாகப் பணியாற்றி இந்த மண்டலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றியை உறுதி செய்ய பாடுபடுவோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தகவல் தொழில்நுட்ப அணியின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் AC3 வரையிலான நிர்வாகிகளை மண்டலம் முழுவதும் நியமித்து மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகங்களின் ஒத்துழைப்புடன் அணியின் நிர்வாகிகள் அனைவருக்கும் சமூக வலைத்தளப் பயிற்சியை அளித்து தேர்தல் பணியில் நூற்றுக்கு நூறு சதவீதம் அணியின் வலிமையை வெளிப்படுத்தி வெற்றியை உறுதி செய்வோம் என்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும், களப்பணியின் மூலமாகவும் ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்த்து, திராவிட நாயகன் ஆட்சியின் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்திலும் பயன் பெற்றிருப்பவர்களின் வாக்குகளை தி.மு.க.வுக்கு ஆதரவாக பதிவு செய்யும் வகையில் மண்டலத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

கழக ஆட்சிக்கு எதிராகவும், முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரைப் பற்றியும் வன்மத்துடன் வதந்திகளை பரப்பும் whatsapp யுனிவர்சிட்டி வகையறாக்களான பா.ஜ.க., அ.தி.மு.க., நாதக உள்ளிட்ட எதிரிகள், புதுப் புது உதிரிகள் என அனைவரையும் கருத்தாயுதத்தால் எதிர்கொள்கின்ற வகையில் சமூக வலைத்தளத்தில் பதிலடிகளை கொடுத்து, களத்திலும் அவர்களை படுதோல்வியடைய செய்வோம் என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

எப்போதும் தேர்தல் களத்தில் முன்னிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்கள போராளிகளான தகவல் தொழில் நுட்ப அணியினரை ஊக்கப்படுத்தும் வகையில் இந்த மண்டல ஆலோசனைக் கூட்டத்திற்கு அனுமதி அளித்த கழகத் தலைவர் முதலமைச்சர், துணை முதலமைச்சர், அணியின் செயலாளரான தொழில் துறை அமைச்சர் ஆகியோருக்கும், இந்த சிறப்பான நிகழ்வுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய இந்த மண்டலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கக் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றியினை தெரிவித்து தாய்க்கழகம் மற்றும் சார்பு அணிகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவோம் என்று இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

இக்கூட்டதில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முருகானந்தம், ரவி , தொன் போஸ்கோ , அருள்நிதி , மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் காளிதாஸ் ,விஜய் ஆனந்த் ,சத்திய பாரதி ,சுரேந்தர் , சகிரா, கலைவாணன், திலீபன் மதியழகன், வினோத் குமார், துவராகேஷ், நிஷா தமிழரசு, சுஜீத்ரா, இர்பான் , கோகுல் அஸ்வின், பிரபாகரன், செந்தில்குமார், செல்வகுமார், தேவநாதன் , யுவ ராஜா, கார்த்திக், சல்மா, ராம்கி, பிரகாஷ், முரளி, நதிம் அகமத், கார்த்திக், குணசேகரன், முரளிதரன், தேன்மொழி உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயராஜசேகர் நன்றி உரையாற்றினார்.



பெஞ்சல் புயல் காரணமாக மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதாடு, வெள்ளப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 2000 குடும்பத்தினருக்கு அரிசி, போர்வை, புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் நான்கு வாகனங்களில் அனுப்பி வைத்து அப்பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அந்தந்த குடும்பத்தினருக்கு முழுமையாக நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். இதில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் மகேஸ்வரி விஜயகுமார், சுமதி ரங்கநாதன், ஊராட்சித் மன்ற தலைவர்கள் மனோகர், தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் சேகர், ஆனந்த துரை, நிர்வாகிகள் சதீஷ், செந்தில், அய்யப்பன், அமர்நாத், மனோகர், ரஜினி, பீமன், பால்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றியம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துதுறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி இளையபெருமாள் நல்லூர் கிராமத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் ஒன்றிய செயலாளர் இரா. மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கடலூர் இள.புகழேந்தி, கழக இளம் பேச்சாளர் பிரபாகரன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க.கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### கடலூர் ஊராட்சி ஒன்றியம் - மருதாடு, வெள்ளப்பாக்கம் பகுதிகளைச் சேர்ந்த

# 2000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வாகனம் மூலம் அனுப்பும் பணி!

## சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் தொடங்கி வைத்தார்!

கடலூர், டிச.18 -

பெஞ்சல் புயல் காரணமாக மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி ஆறுதல் கூறி வந்த நிலையில் தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார்.

இந்த நிலையில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதாடு, வெள்ளப்பாக்கம் ஆகிய ஊராட்சிகளைச்சேர்ந்த 2000 குடும்பத்தினருக்கு அரிசி, போர்வை, புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் நான்கு வாகனங்களில் அனுப்பும் பணி நடைபெற்றது.

இதனை தொடர்ந்து கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. வாகனங்களை அனுப்பி வைத்து அப்பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அந்தந்த குடும்பத்தினருக்கு முழுமையாக நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர்கள் மகேஸ்வரி விஜயகுமார், சுமதி ரங்கநாதன்,

ஊராட்சி மன்றத் தலைவர்கள் மனோகர், தமிழரசி பிரகாஷ், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், முன்னாள் கவுன்சிலர் சேகர், ஆனந்த துரை, நிர்வாகிகள் சதீஷ், செந்தில், அய்யப்பன், அமர்நாத், மனோகர், ரஜினி, பீமன், பால்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாகை அருகே கனமழையால் சுவர் இடிந்து விழுந்ததில் இறந்த

# மாணவன் கவியழகன் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம்நிதி உதவி!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன் – க.ராஜேந்திரன் பங்கேற்பு!

நாகை, டிச. 18 -

நாகை மாவட்டம், நாகை ஒன்றியம் செம்பியன்மகாதேவி கிராமம் விநாயகன் தோப்பை சேர்ந்த முருகதாஸ் விவசாயக் கூலித் தொழிலாளி இவரது மகன் கவியழகன், செம்பியன்மகாதேவி அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். 11.12.2024 இரவு பெய்த கனமழையில் சுமார் 11.45 மணியளவில் அவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் அடிபட்டு கவியழகன் என்பவருக்கு இடது காதில் ரத்தக்கசிவு வரப்பெற்றது. மேலும் தந்தை முருகதாஸ், தாயார் லெட்சுமி, தங்கை சிவஸ்ரீ ஆகியோருக்கு காயம் ஏற்பட்து. உடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அனைவரும் ஒரத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அப்போது மருத்துவர் பரிசோதித்ததில் கவியழகன், ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

முருகதாஸ், .லெட்சுமி, சிவஸ்ரீ ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பினர். இதையடுத்து வீட்டின் சுவர் இடிந்து விழுந்து இறந்த கவியழகன் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4,00,000க்கான காசோலையினை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

நிகழ்ச்சியில் நாகை மாவட்டத் கழகச் செயலாளரும், தமிழ்நாடு தமிழ் நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ்,, கீழ் வேளூர் சட்டமன்ற உறுப்பினர் .நாகைமாலி, நாகை தெற்கு ஒன்றியச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. இராஜேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் மகாகுமார், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் கோ.அரங்கநாதன், நாகப்பட்டினம் வட்டாட்சியர் ராஜா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 13.12.2024 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு, கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் தலைமையில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக இளம் சொற்பொழிவாளர் மு.கபில் சிறப்புரையாற்றினார்கள் . கூட்டத்தில் மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர்கள் கிழக்கு கதிர்வேல், தெற்கு ஆர். விஜயகுமார், அவல் பூந்துறை பேரூர் கழக செயலாளர் சாமியப்பன் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அடிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.